# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8737/விசாரணை/E/2024**

திரு.த.சண்முகம் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரத் துறை மற்றும்
நோய் தடுப்பு இயக்குநரகம்,
டி.எம்.எஸ்.வளாகம், தேனாம்பேட்டை, சென்னை-6. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 16.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை-6, பொது சுகதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை அலுவலக நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.எ.ஜெயந்தி 01.04.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு 23.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் 24.03.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை 26.03.2026 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணைய தள Tracking Report-ன் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மேல்முறையீட்டாளர் 04.04.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், பொதுத் தகவல் அலுவலர் 23.03.2026 தேதியிட்ட கடிதத்தில், தனக்கு சிறப்பு நிலை சுகாதார ஆய்வாளர் பதவியில் 01.10.1994-ல் ஒரு தேக்க நிலை ஊதிய உயர்வு வழங்க இயலாது என்று அரசு ஆணைகள் மற்றும் நீதிமன்ற ஆணைகளுக்கு புறம்பாக தவறான தகவலை தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகளுக்கு புறம்பாக தகவலை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. இவ்வாணையத்தின் உத்தரவினை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றியுள்ளதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது. மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்கள்/தகவல்களை கோரி பெற இயலும் என்றும், கோரிக்கைகளுக்கு தீர்வு காண இயலாது என்றும், வழங்கப்பட்ட தகவல்களை

கொண்டு, மேல்முறையீட்டாளர் அவரது தேக்க நிலை ஊதிய உயர்வு கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரிகளை நாடியோ அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை நாடியோ தீர்வு காணுமாறு மேல்முறையீட்டாளருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.

**ஆணை நாள்: 09 .04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8737/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரத் துறை மற்றும் நோய் தடுப்பு இயக்குநரகம்,
டி.எம்.எஸ்.வளாகம், தேனாம்பேட்டை, சென்னை-6.

திரு.த.சண்முகம் த/பெ.திரு.சே.தனுஷ்கோடி
11/17 போஸ்ட் ஆபிஸ் தெரு,
முடிவைத்தானேந்தல் அஞ்சல்,
தூத்துக்குடி மாவட்டம்-628 102.

Copy to: File
RJ/PS 9.4